www.Padasalai.Net www.TrbTnpsc.com

S

SIVAGANAGAI DIST.

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்:

## விலங்கியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 70

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 15×1=15

1. உப்புத் தன்மையுள்ள சூழ்நிலையில் வாழும் சில உயிரினங்கள் ............ என அழைக்கப்படுகின்றன.
   அ) தெர்மோ அஸிடோஃபைல்கள் ஆ) ஹேலோஃபைல்கள்
   இ) எக்ஸ்ட்ரிமோஃபைல்கள் ஈ) இவை அனைத்தும்
2. மூலக்கூறு வகைப்பாட்டின் கருவியில் இது அடங்கியுள்ளது.
   அ) டி.என்.ஏ & ஆர்.என்.ஏ ஆ) மைட்டோகாண்ட்ரியா மற்றும் எண்டோபிளாசவலை
   இ) செல்சுவர் மற்றும் பிளாஸ்மாபுரோடீன் ஈ) மேற்கூறிய அனைத்தும்
3. கீழ்க்காணும் எந்த உயிரியில் 'சுயக் கருவுறுதல்' நடைபெறுகிறது?
   அ) மீன் ஆ) உருளைப்புழு இ) மண்புழு ஈ) கல்லீரல் புழு
4. லாம்பிட்டோ மாரிட்டீ மண்புழுவின் சிறப்புப் பகுதியான கிளைடெல்லம் காணப்படுவது
   அ) 13 முதல் 14 வரை உள்ள கண்டங்களில் ஆ) 14 முதல் 17 வரை உள்ள கண்டங்களில்
   இ) 12 முதல் 13 வரை உள்ள கண்டங்களில் ஈ) 14 முதல் 16 வரை உள்ள கண்டங்களில்
5. நீண்ட ஆழ்ந்த மூச்சுக்குப் பின் சில வினாடிகள் நாம் காற்றை சுவாசிப்பதில்லை, இதற்கு காரணம்?
   அ) இரத்தத்தில் அதிக $CO_2$ இருப்பதால் ஆ) இரத்தத்தில் அதிக $O_2$ இருப்பதால்
   இ) இரத்தத்தில் குறைவான $CO_2$ இருப்பதால் ஈ) இரத்தத்தில் குறைவான $O_2$ இருப்பதால்
6. கீழ்க்காணும் எந்த இணை, லார்வாக்களின் அடிப்படையில் தவறாக பொருந்தியுள்ளது?
   அ) துளையுடலிகள் - பாரன்கைமுலா ஆ) நிடேரியா - பிளானுலா
   இ) டீனோஃபோரா - சிடிப்பிட் லார்வா ஈ) அன்னலிடா - மிராசீடியம்
7. திசுக்களுக்கிடையில் பொருட்கள் கசிவதைத் தடுக்கும் அமைப்பு ............
   அ) இறுக்கமான சந்திப்புகள் ஆ) ஒட்டும் சந்திப்புகள்
   இ) இடைவெளி சந்திப்புகள் ஈ) மீள் தன்மை சந்திப்புகள்
8. சரியான இணையைப் பொருத்துக :

| பகுதி - I | பகுதி - II |
|---|---|
| P) மூச்சுக்காற்று அளவு - | i) 1000 முதல் 1100 மி.லி. வரை |
| Q) எஞ்சிய கொள்ளளவு - | ii) 500 மிலி |
| R) வெளிச்சுவாச சேமிப்பு கொள்ளளவு - | iii) 2500 முதல் 3000 மி.லி வரை |
| S) உட்சுவாச சேமிப்பு கொள்ளளவு - | iv) 1100 முதல் 1200 மிலி வரை |

   அ) P - ii, Q - iv, R - i, S - iii ஆ) P - iii, Q - ii, R - iv, S - i
   இ) P - ii, Q - iv, R - iii, S - i ஈ) P - iii, Q - iv, R - i, S - ii
9. இரத்தம் உறைதலில் பங்கேற்காதது எது?
   அ) ஃபைப்ரின் ஆ) கால்சியம் இ) இரத்தத் தட்டுகள் ஈ) பிலிரூபின்
10. நிணநீர் நிறமற்றுக் காணப்படுவதன் காரணம் .............
    அ) இரத்த வெள்ளையணுக்கள் இல்லாததால் ஆ) இரத்த வெள்ளையணுக்கள் இருப்பதால்
    இ) ஹீமோகுளோபின் இல்லாததால் ஈ) இரத்த சிவப்பணுக்கள் இல்லாததால்
11. சிறுநீரக நுண்குழல்களில் நீர் மீள உறிஞ்சப்படுதலுக்கு உதவும் ஹார்மோன் ...........
    அ) கோலிசிஸ்டோகைனின் ஆ) ஆஞ்சியோடென்சின்
    இ) ஆன்டிடையூரிட்டிக் ஹார்மோன் ஈ) பான்கிரியோசைமின்
12. கீழ்க்கண்ட எப்பொருள் யூரிக் அமிலத்துடன் இணைந்து சிறுநீரகக் கற்களை உருவாக்குகிறது?
    அ) சிலிக்கேட்டுகள் ஆ) தாது உப்புகள்
    இ) கால்சியம் கார்பனேட் ஈ) கால்சியம் ஆக்சலேட்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13. எந்த இணை தவறானது?
அ) வைட்டமின் D - ரிக்கெட்ஸ்
ஆ) தயமின் - பெரிபெரி
இ) வைட்டமின் K - மலட்டுத்தன்மை
ஈ) நியாசின் - பெலக்ரா
14. இயற்கையில் மிக அதிக எண்ணிக்கையில் சிற்றினங்களைக் கொண்ட உயிரிகள் ..............
அ) பூச்சிகள் ஆ) பறவைகள் இ) ஆஞ்சியோஸ்பெர்ம் ஈ) பூஞ்சைகள்
15. 'பாரம்பரிய வகைப்பாட்டியலின் தந்தை' என அழைக்கப்படுபவர் ..............
அ) கரோலஸ் லின்னேயஸ் ஆ) அரிஸ்டாட்டில்
இ) தியோபிராஸ்டஸ் ஈ) ஜான் ரே

II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 24 கட்டாயம் விடையளிக்கவும். 6×2=12

BHARATHIRAJA A
MSc., M.Ed., MA., M.Phil. D.O.A
PGT IN ZOOLOGY
DE BRITTO HSS. DEVAKOTTAI
SIVAGANAGAI DIST.

16. கிளாடோகிராம் என்றால் என்ன?
17. நரம்பு செல் படம் வரைந்து பாகம் குறி.
18. கரப்பான் பூச்சியைத் தீங்குயிரி என ஏன் அழைக்கின்றோம்?
19. சுடர் செல்கள் என்றால் என்ன?
20. உயிர்ப்புத் திறன் - வரையறு.
21. தமனி, சிரை இரண்டு வேறுபாடு தருக.
22. நாங்கூழ் கட்டிகள் என்றால் என்ன?
23. சிறுகுடலில் மட்டும் உறிஞ்சிகள் உள்ளன. ஏன் இரைப்பையில் இல்லை?
24. அம்மோனியா நீக்கிகள் என்றால் என்ன? ஒரு எ.கா. தருக.

III. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 33 கட்டாயம் விடையளிக்கவும். 6×3=18

25. எலும்பு மீன்களின் மூன்று முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.
26. அருங்காட்சியகம் - சிறுகுறிப்பு வரைக.
27. வெள்ளை அடிப்போஸ் திசு, பழுப்பு அடிப்போஸ் திசு - வேறுபடுத்துக.
28. உமிழ்நீர் சுரப்பிகளின் மூன்று வகைகளையும், அவற்றின் நாளங்களின் பெயர்களையும் எழுதுக.
29. தவளையின் செரிமான மண்டலம் படம் வரைந்து பாகம் குறி.
30. தட்டைப்புழு, மண்புழு, மீன், இறால், கரப்பான்பூச்சி மற்றும் பூனை ஆகியவற்றின் சுவாச உறுப்புகளின் பெயர்களை எழுதுக.
31. ஆர்னித்தைன் சுழற்சி (யூரியா சுழற்சி) படத்துடன் விளக்குக.
32. நீ உன் நண்பனுக்கு புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி என்னென்ன அறிவுரைகள் வழங்குவாய்?
33. இதய ஒலிகள் என்றால் என்ன? அவை எப்போது மற்றும் எப்படி உண்டாக்கப்படுகின்றன?

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 5×5=25

34. அ) வகைப்பாட்டின் அடிப்படைத் தேவைகள் யாவை? (அல்லது)
ஆ) கணுக்காலிகளின் பொதுப்பண்புகள் யாவை?
35. அ) முதுகுநாண் உடையவை, முதுகு நாண் அற்றவை வேறுபாடு தருக. (அல்லது)
ஆ) எபிதீலியம் என்றால் என்ன? அதன் பல்வேறு வகைகளின் பண்புகளைத் தருக.
36. அ) ஆண் கரப்பான் பூச்சி, பெண் கரப்பான் பூச்சி - வேறுபடுத்துக. (அல்லது)
ஆ) தவளை மற்றும் தேரை - வேறுபாடு தருக.
37. அ) சுவாசம் நடைபெறும் முறையை விளக்குக. (அல்லது)
ஆ) நமது உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பியாகிய கல்லீரலின் பணிகளைத் தொகுத்து எழுதுக.
38. அ) சிறுநீரகத்தின் நீள் வெட்டுத் தோற்றம் படம் வரைந்து பாகம் குறி. (அல்லது)
ஆ) ABO இரத்த வகைகளை அட்டவணைப்படுத்தி எழுதுக.

----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com